கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி

அ.வ.எண்.294/2020 வா.சா.1 சரவணபிரகாஷ்

SOLEMNLY AFFIRMED IN ACCORDANCE WITH THE PROVISIONS OF OATHS ACT OF 1969 OF THE DAY OF 11.07.2025

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 4 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) என்ன பரிகாரம் கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் 4 ம் பிரதிவாதி அரணிவாய்க்காலில் உள்ள உரிமையை மறுத்து அதனை பயன்படுத்துவதை தடுத்ததால் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். அரணிவாய்க்கால் பயன்பாட்டை 4 ம் பிரதிவாதி தடுத்ததாக கூறும் நிலையில் அவர் எப்போது எப்படி அவ்வாறு செய்தார் என்றால் கடந்த ஜுன் 2020-ல் அவர் என்னிடம் எனக்கு வாய்காலில் உரிமை இல்லை எனவும், தண்ணீர் எடுக்கவேண்டாம் எனவும் கூறினார். 4 ம் பிரதிவாதி தன் பூமியில் செல்லும் வாய்க்காலில் தண்ணீர் எடுக்கவேண்டாம் என கூறினாரா அல்லது பொது வாய்க்காலில் தண்ணீர் எடுக்கவேண்டாம் என கூறினாரா என்றால் தனது பூமியில் செல்லும் வாய்க்காலில் தண்ணீர் எடுக்கவேண்டாம் என கூறினார்.

2) 4 ம் பிரதிவாதி தடுத்ததாக சொல்லும் சமயத்தில் அவ்வாய்க்காலில் தண்ணீர் சென்று கொண்டிருந்தது என்றால் சரிதான். வழக்குரையிலோ, முதல் விசாரணையிலோ வாய்க்காலில் தண்ணீர் சென்றுக்கொண்டிருந்தது என குறிப்பிடவில்லை என்றால் சரிதான். என் முதல் விசாரணையில் 9 ம் பத்தியில் 4 ம் பிரதிவாதி இடையூறு செய்தகாலம் மார்ச் 2020 என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மாதம் சற்று சரியாக ஞாபகம் இல்லாததால் ஜுன் என்று கூறிவிட்டேன். அப்பத்தியில் ஒற்றைக்கல் அரணிவாய்க்காலை இயந்திரம் மூலம் இடித்து அப்புறப்படுத்தியதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அது எந்த இயந்திரம் என்றால் அது JCB ஆகும். இடிப்பதை நான் நேரில் பார்த்தேனா என்றால்

பார்த்தேன். என் முதல் விசாரணையில் JCB என குறிப்பாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் நேரில் பார்த்ததாக கூறும் நிலையில் எந்த தேதியில், எந்த நேரத்தில் மேற்படி இடிப்பு நடந்தது என்றால் தேதி ஞாபகம் இல்லை, நேரம் காலை 11.00 மணி இருக்கும். நான் இடிப்பதை பார்த்தபோது தடுக்க ஏதேனும் முயற்சித்தேனா என்றால் JCB ஓட்டுனரிடம் கூறினேன், ஆனால் அவர் காட்டுக்காரரிடம் பேசிக்கொள்ளுமாறு கூறினார்.

3) மேற்படி இடிப்பு சம்பவம் தொடர்பாக காவல்துறையிலோ, வருவாய் துறையிலோ, பொதுப்பணித்துறையிலோ புகார் அளித்தேனா என்றால் வருவாய் துறையிலும், பொதுப்பணித்துறையிலும் புகார் அளித்தேன். காவல் துறையிடம் புகார் அளிக்கவில்லை. மேலும், பாசன சங்க தலைவரிடமும் புகார் அளித்தேன். மார்ச் மாதம் நடந்ததாக சொல்லும் சம்பவத்திற்கு இரு மாதம் கழித்து கடந்த 29.05.2020 அன்றுதான் உதவி பொறியாளருக்கு வா.சா.ஆ.7 கடிதத்தை அனுப்பினேன் என்றால் சரிதான். நான் வட்டாட்சியரிடம் கொடுத்த புகாரை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

4) வா.சா.ஆ.7 புகார் கடிதத்தில் 4 ம் பிரதிவாதி JCB இயந்திரம் வைத்து வாய்க்காலை இடித்தார் என குறிப்பிட்டுள்ளேனா என்றால் அரணிவாய்க்காலை அழித்தார் என மட்டும் குறிப்பிட்டுள்ளேன். கடந்த 29.05.2020 தேதியிட்ட வா.சா.ஆ.7 புகாரில் *"... சில தினங்களுக்கு முன் மேற்படி பூமியில் மராமரத்து செய்வதாக கூறி எனக்கு பாத்தியப்பட்ட அரணியினை அழித்து மண் கொண்டு மூடியுள்ளார் "*என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

5) பாசன சங்க தலைவரிடம் கொடுத்ததாக சொல்லும் புகாரை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் அவ்வாறு புகார் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றும், தாக்கல் செய்ததாக பொய்யாக சொல்லுகிறேன் என்றும், அவ்வாறு சம்பவம் எதுவும் நடைபெறாததால்தான் நான் புகாரினை தாக்கல் செய்யவில்லை என்றும், சொன்னால் சரியல்ல.

6) இவ்வழக்கு மேற்படி சம்பவம் நடைபெற்று சுமார் 6 மாதம் கழித்துதான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் முதன் முதலாக கடந்த 01.10.2020 அன்றுதான் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். 4ம் பிரதிவாதி உண்மையிலேயே இயந்திரம் கொண்டு வாய்க்காலை அழிப்பதை நான் நேரில் பார்த்திருந்தால் நான் என் கைப்பேசியில் புகைப்படம் எடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. 4 ம் பிரதிவாதி உண்மையிலேயே இயந்திரம் கொண்டு வாய்க்காலை அழிப்பதை நான் நேரில் பார்த்திருந்தால் உடனடியாக காவல்துறையில் புகார் கொடுத்திருப்பேன் என்றால் இது பி.ஏ.பி. பிரச்சினை என்பதால் காவல்துறையினரிடம் செல்லவில்லை. வருவாய் துறையினரிடமாவது உடனடியாக கொடுத்தேனா என்றால் கடந்த 2021-ல் தான் புகார் கொடுத்தேன். ( **சாட்சி தாமாகவே கடந்த 2020 இறுதியில் புகார் கொடுத்ததாகவும், கடந்த 2021-ல் வருவாய் துறை தனக்கு ஆதரவாக உத்தரவு பிறப்பித்ததாகவும் கூறுகிறார்**) அவ்வாறான உத்தரவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. கடந்த 2021-ல் வருவாய் துறை எனக்கு ஆதரவாக உத்தரவு பிறப்பித்திருந்தால் நான் அதனை தாக்கல் செய்துஇருப்பேன் என்றும், அவ்வாறு உத்தரவு எதுவும் இல்லாததால்தான் தாக்கல் செய்யவில்லை என்றும், சொன்னால் சரியல்ல.

7) 4 ம் பிரதிவாதி உண்மையிலேயே இயந்திரம் கொண்டு வாய்க்காலை அழிப்பதை நான் நேரில் பார்த்திருந்தால் நான் அன்றைய தினமே அனைத்து அதிகாரிகளிடமும் புகார் அளித்திருப்பேன் என்றால் சரியல்ல. நான் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள புகார் தொடர்பான ஆவணங்கள் அனைத்தும் நான் சொல்லும் சம்பவ தேதியில் இருந்து 2 மாதங்கள் கழித்துதான் உள்ளது என்றால் பாசன தலைவரிடம் நான் நேரடியாக கூறியபோது அவர் ஆவணங்களை பரிசீலித்து கூறுவதாக சொன்னதால் தாமதம் ஏற்பட்டது.

8) வா.சா.ஆ.8 கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரம்பிக்குளம் ஆழியார் பாசன திட்ட

நீரினை பயன்படுத்துவோர் சங்கம் ஆனது தனியார் சங்கம் என்றால் அது அரசால் அங்கீகரிக்கப்பட்ட சங்கம் ஆகும். வா.சா.ஆ.8 ஆவணத்தில் அது பதிவு செய்யப்பட்ட சங்கம் என்று மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி சங்கம் வெறும் பதிவு செய்யப்பட்ட சங்கம் என்றும், அரசால் அங்கீகரிகப்பட்ட சங்கம் அல்ல என்றும் சொன்னால் சரியல்ல. நான் சொல்வதுபோல் மேற்படி சங்கம் அரசு அங்கீகரிகாரம் பெற்ற சங்கமாக இருந்திருந்தால் அதன் கடித்தத்தில் தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் உறுப்பினர்கள் பெயர் இடம்பெற்றிருந்திருக்கும் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.8 பதில் கடிதத்திலும், நான் அச்சங்க தலைவரிடம் கடந்த 29.05.2020 அன்றுதான் புகார் அளித்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அதற்குமுன் வாய்மொழியாக புகார் அளித்திருந்தேன். மேற்படி சங்க தலைவருக்கு வா.சா.ஆ.8 பதில் கடிதம் வழங்க சட்டப்படி அதிகாரமில்லை என்றும், மேற்படி சங்கம் அன்றைய தேதியில் ஒரு போலியான சங்கம் என்றும் சொன்னால் சரியல்ல.

(4 ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்குவிசாரணை 18.07.2025 தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).